இணைப்பு I.

[485 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 22-க்கான விடையைக் காண்க.]

விடை—(அ) கீழ்க்கண்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன—

(1) நிறுவிய உற்பத்தி திறனில் முன்னேற்றம் காண, கால வரையறைக்குட்பட்ட திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். 1978–79 ஆம் வருடத்திற்கான இத்திட்டத்தை மத்திய மின் அமைப்பின் கீழ் மாநில பிரதிநிதிகள் அடங்கிய செயற்குழு ஒன்று பிப்ரவரிக்குள் வகுக்கும். இவ்வாறு வகுக்கப்படும் திட்டம் பெரும்பாலும் அவ்வருடத்தில் பெய்யும் மழை மற்றும் இதர காரணங்களை பொறுத்து இருக்குமாதலால், இத்திட்டம் ஒவ்வொரு வருடமும் வகுக்கப்பட வேண்டும்.

(2) தற்பொழுதுள்ள பொருளாதார செயல் முறைகளை ஆய்வு செய்து மின் வாரியங்களின் ஒட்டு மொத்தம் செயல் முறைகளில் மேம்பாடு காணவும் மின் கட்டண வீதங்களை ஒழுங்கு படுத்துவதற்காகவும் தேவையான நடைமுறையில் சாத்தியமாகும் பரிந்துரைகளை கூறுவதற்காக, மாநில மின் வாரியங்களின் செயல் முறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அகில இந்திய அளவில் அமைக்கப்படலாம்.

(3) மின் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, மாநிலத்தில் மேல்மட்ட அளவில் அவ்வப்போது நடைபெறும் திட்டப் பணிகளை ஆய்வு செய்து ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே செய்யாமல் இருந்தால், இரண்டு மாத காலத்திற்குள் செய்யப்பட வேண்டும்.

(4) மின்வாரியப் பணிகளை செவ்வனே நிறைவேற்றக் கூடிய திறமை மிக்க வாரிய தலைவர்களையும் மற்றும் வாரிய உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க குழு ஒன்றை மாநில அரசு அமைக்க வேண்டும். தேவைப்பட்டால் இதற்கு மத்திய அரசின் உதவியை பெறலாம்.

(ஆ) மின் வாரியங்களின் தலைவர்களை நிர்ணயிப்பதற்கு விசேஷ அமைப்பு ஒன்றை நிறுவ மாநிலங்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனவா ?

விடை—(ஆ) ஆம்.

(இ) ஆம் எனில் தமிழ்நாட்டுக்கு அவ்வித அமைப்பு எப்போது நிறுவப்படும் ?

விடை—(இ) மின் வாரியத் தலைவருக்குத் தேவையான அனுபவம், திறமை அனுபவம், ஆர்வம் இவைகளை கருத்திற் கொண்டு மின் வாரியத் தலைவரை இவ்வரசு தேர்ந்தெடுக்கிறது. ஆகையால், மின் வாரியத் தலைவரை தேர்ந்தெடுக்க தேர்வுக் குழு ஒன்று அமைப்பது தேவையில்லாத ஒன்றாகும்.